**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண். 180** **நாள் : 13.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இயற்கை பேரிடர் காலங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.4 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 336 நவீன இயந்திரங்களை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் இன்று வழங்கினார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சியில் இயற்கை பேரிடர் காலங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.4 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டிலான மரஅறுவை இயந்திரங்கள், ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளைகளை நீக்கும் இயந்திரங்கள், நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் ஜெனரெட்டர்கள் என கூடுதலாக 336 நவீன இயந்திரங்களை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் இன்று (13.11.208) 15 மண்டலங்களுக்கு வழங்கினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை மாறுதலின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் சாலைகளில் விழுகின்ற மரங்களை உடனுக்குடன் அப்புறப்படுத்திட தற்போது 171 எண்ணிக்கையிலான மரஅறுவை இயந்திரங்களும், பருவமழை காலங்களில் தாழ்வான பகுதிகளில் தேங்குகின்ற மழை வெள்ளநீரை உறிஞ்சி வெளியேற்றுவதற்கு தற்போது அதிகதிறன் கொண்ட நீர் இறைக்கும் பம்புகள் 17 எண்ணிக்கையிலும் உள்ளன.

பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் பொதுமக்களின் நலனுக்காக வெள்ள நிவாரணப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள 5 HP திறன் கொண்ட பெட்ரோல் இன்ஜின் மூலம் இயங்கும் ரூ.59,000/ மதிப்பிலான மரஅறுவை இயந்திரங்கள் கூடுதலாக 200 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.1,18,00,000/– மதிப்பீட்டிலும், 25 HP திறன் கொண்ட ரூ.4,94,764/– மதிப்பிலான நீர் இறைக்கும் பம்புகள் கூடுதலாக 30 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.1,48,42,920/– மதிப்பீட்டிலும், மேலும் 8 மீட்டர் உயரத்தில் உள்ள மரக்கிளைகளை அகற்றும் பணிக்காக நவீன வகையிலான ஹைட்ராலிக் மூலம் இயக்கப்படும் மரக்கிளைகளை நீக்கும் ரூ.19,98,000/ மதிப்பிலான இயந்திரங்கள் 6 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.1,19,88,000/– மதிப்பீட்டிலும், மழைக்காலங்களில் தெருவிளக்குகளை ஒளிரச் செய்வதற்காக 2 KVA திறன் கொண்ட ரூ.1 இலட்சம் மதிப்பிலான ஜெனரேட்டர்கள் 100 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.1,00,00,000/– மதிப்பீட்டில் என மொத்தம்

ரூ.4 கோடியே 86 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதலாக 336 நவீன இயந்திரங்கள் மாநில பேரிடர் மேலாண்மை நிதியின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் பருவமழை மற்றும் பேரிடர் காலங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக இன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களால் வழங்கப்பட்டது.

தொடர்ந்து இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பெருமழை மற்றும் புயல் போன்ற இயற்கை பேரிடர் காலங்களில் பொதுமக்கள் உயர் அலுவலர்கள் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்களின் கைபேசி மற்றும் அலுவலக எண்கள், அவசரகால தொடர்பு எண்கள், மேலும் தொடர்புடைய சேவைத்துறைகளான சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுவாரியம், மின்சார வாரியம், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, பேரிடர் மேலாண்மை, கப்பற்படை, கடலோர காவல் படை, விமானப்படை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், காவல்துறை, இந்திய வானிலை ஆய்வு மையம், வானொலி, இந்து அறநிலையத் துறை, வேளாண்மைத்துறை, தீயணைப்புத்துறை, போக்குவரத்துத்துறை, ஆவின், குடிசைமாற்று வாரியம், மீன்வளத்துறை, வனத்துறை, சுகாதாரத்துறை, தென்னக இரயில்வே துறை, பி.எஸ்.என்.எல், மெட்ரோ இரயில்வே துறை, ரெட் கிராஸ், புளூ கிராஸ் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்கள் நலத்துறை போன்ற துறைகளின் தொடர்பு எண்கள் மற்றும் முகவரி அடங்கிய மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் 2018 என்ற கையேட்டினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் இன்று வெளியிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நிர்வாக முதன்மைச் செயலர்/ஆணையாளர் டாக்டர் கே.சத்யகோபால், இ.ஆ.ப. அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு செயலர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. அவர்கள், பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையாளர் திரு.ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப. அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) திரு.எஸ்.பி.பாலசுப்ரமணியம், செயற்பொறியாளர் திரு.ஆர்.ஏ.பிரபாகர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**